ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை


பரிதாபி
மாசி

March
1973





தொகுதி 35
பகுதி 3

Vol. 35
No 3


ஆசிரியர் & பிரசுரகர்த்தா

வைத்ய T. S. ஈச்வரன், L. I M.


| | |
|---|---|
| திரு சுபானின் மறைவு | 41 |
| ஜடராக்னி – என்ஸைம் | 42 |
| அட்ரினல் கிரந்தியும் ஸாதகபித்தமும் | 46 |
| புற்று நோய் | 49 |
| ஸ்வர்ண வங்கம் | 53 |



வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

## வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31

| | | |
|---|---|---|
| நர்ஸிங்ஹோம் | | போன் நெ. 44 |
| தலைமை வைத்யர் | | போன் நெ. 25 |
| மானேஜிங் டிரஸ்டி | (வீடு) | போன் நெ 27 |
| | (ஆபீஸ்) | போன் நெ 61 |
| மானேஜர் | (வீடு) | போன் நெ. 26 |

**சென்னை கிளை :**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள் :**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
## பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202

## சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பத்திமூன்று ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

**ஸௌபாக்கிய ரஸாயனம்**

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்,
300 கிராம் பாட்டில் ரூ. 5.

**பயஸ்யா**

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5-50
— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON, GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

**M|s. Kalia Brothers (Regd.)**

**Wholesale Musk & Indian Drugs Merchants,**

JULLUNDUR CITY (PUNJAB)

**Gram: KALIA**

**Phone: Office - 3232**
**Resi. - 4343**

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ, கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

**கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]**

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

தந்தி: **KALIA**

போன்: ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி : "அம்ருதம்" P, B. No. 1382. போன் : 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ் : 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD. AVP

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்**

—— எங்களுடைய கிளைகள் : ——

| | | |
|---|---|---|
| 1. | 23-B, பூஸா ரோடு, புது டில்லி-5 | போன் : 585687 |
| 2. | மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, 85752 |
| 4 | வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-16 | ,, 32336 |
| 5. | பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1 | ,, 92 |
| 6 | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, 195 |
| 7. | கடைவீதி பொன்னானி | ,, 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1. | ,, 378 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | 33758 |
| 12. | இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 | ,, 4891 |
| 13. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு கண்ணனூர்-2 | 842 |
| 14. | No. 263, 64. 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி) | 31 |
| 15. | ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1 | |

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் ; 22194)

---

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

# வாரியர்

# க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அமுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனுபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].



ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை

| | | |
|---|---|---|
| தொகுதி 35 | பரிதாபி மாசி | பகுதி 3 |
| Vol. 35 | 1973 மார்ச்சு | No. 3 |


श्री धन्वन्तरये नमः

## திரு. சுபானின் மறைவு

தமிழக அரசின் நாட்டு வைத்தியத்துறையின் இயக்குனராக அரும் பணியாற்றி வந்த திரு. எஸ். ஏ. ஸுபான் அவர்கள் அண்மையில் மறைந்த செய்தி நாட்டு வைத்தியர்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தி உள்ளது. திரு. சுபான் அவர்கள் நாட்டு வைத்திய வளர்ச்சியில் அரசினர் தீட்டிய திட்டங்களை உடனுக்குடன் செயலாற்றிப் பொதுமக்களுக்கு நாட்டு வைத்தியத்தின் சேவை எளிதில் கிட்டுமாறு செய்தார். சென்னையில் அண்ணா மருத்துவமனையை உருவாக்கியதில் பெரும் பொறுப்பு அன்னாருடையதே. கடைசி மூச்சுள்ளவரை சுறுசுறுப்பாகச் செயலாற்றியவருக்கு எதிர்பாராதபடி மாரடைப்பு நோய் காலனாக வந்தது. அவர் குடும்பத்திற்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

# ஜடராக்னி — என்ஸைம்

பித்தம் ஐந்து வகை. அதில் பாசகபித்தம் ஒரு வகையாகும். பக்வாசயம் ஆமாசயம் இவைகளின் நடுவே இருந்து கொண்டு ஸமானன் முதலிய வாயுக்களுக்கும் க்லேதக கபத்திற்கும் உதவியாக நின்று, உண்ட உணவைப் பாகம் செய்கின்றது. பாகம் என்பது ஸங்காதபேதனம் (நெருக்கத்தை உடைப்பது) எனப்படும். அதன் ஸ்தூலத்தன்மையைப் போக்கி ஸூக்ஷ்மத் தன்மையளிப்பது எனப் பொருள். பாகத்தின் மற்றொரு நிகழ்ச்சி பிரிவினை-ஸாரம் கிட்டம் என. மூன்ருவது நிகழ்ச்சி சோதனம்— உடலுக்கேற்றவாறிருக்கக் கேடுகளை அகற்றுவது. ஆக இந்த நெருப்பின் தன்மையைக் காட்டும் இச்செய்கைகளைப் புரியும் பாசக பித்தத்தை நெருப்பெனவே ஜடராக்னி—காயாக்னி, அந்தரக்நி என்றே கூறுலாயிற்று. ஐம்பூதங்களாலானதாயினும் அக்னி குணம் மிக்கதானதால் ஜலத்தின் திரவத் தன்மை குறைந்துள்ளது. ஜடராக்னியின் ஸங்காத பேதனம் எனும் ஸூக்ஷ்மமாக்கும் தன்மையால் மற்றொரு நன்மையும் ஏற்படுகிறது. உள்ளே செல்லும் உணவு உடலுக்கு ஹானி விளைவிக்காமலிருக்க இப்பணி அவசியமாகின்றது. நேரிடையாக உணவுகளை தாதுக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது சில உணவுப் பொருள்கள் நேரிடையாக தாதுக்களுடன் கலக்க நேரிடின் விஷ சக்தியால் உடலில் ஹானி விளைவதுண்டு. பாசகாக்னியால் பாகமடைந்த உணவில் அவ்விஷ சக்தி மாறிவிடுகின்றது ஆயுர்வேதத்தின் பாசகாக்னிக்கும் நவீன மருத்துவ முறையின் என்ஸைம் (Enzyme), கோ-என்ஸைம் (Co-enzyme) முதலிய உள்சுரப்புகளுக்கும் சில விதத்தில் பொருத்தத்தைக் காண்கிருேம். அவைகளை ஆராய்வோம்.

கெமிஸ்டிரி விக்ஞானத்தில் கேடலிஸ்ட் (Catalyst) கேடலைஸர் (Catalyzer) என்று சில பொருள்கள் குறிப்பிடப்படுகின்றன. இவை ஸாங்க்ய புருஷன் போல தான் ஒருவித ரஸாயன மாறுதல்களுக்கும் உட்படாதிருந்து கொண்டு, தனது சமீபத்திலுள்ள பொருள்களில் ரஸாயன மாறுதல்களை துரிதப்படுத்தும் தன்மை உள்ளவையாகும் கெமிஸ்டிரி படிக்கும் மாணவனுக்கு பொடாஷியம் க்ளோரேட் என்னும் பொருளிலிருந்தும் ஆக்ஸிஜன் பிரிப்பது பற்றிக் குறிப்பிடும் போது பொட்டாஷியம் க்ளோரின் ஆக்ஸிஜன் என்ற மூன்று பொருள்களின் சேர்க்கையிலிருந்து

ஆக்ஸிஜனைத் தானே பிரியவைப்பது எளிதல்ல; ஆனால் அதில் மேங்கனீஸ் டையாக்ஸைட் சேர்த்ததும் ஆக்ஸிஜன் சீக்கிரமே பிரிந்துவிடுகின்றது என்பது விளக்கப்படும். இவ்விதமே உணவுப் பொருள்களில் ஒரு பிரிவான கார்போஹைட்ரேட் சர்க்கரையாக மாற ஜலத்தின் உதவியை எதிர்பார்க்கின்றது. அந்தச் செயலை துரிதப்படுத்தச் சிறிதளவு கந்தகாமிலம் சேர்த்துக் கொதிக்கு மளவு சூடு கொடுக்க சர்க்கரையாகின்றது. அவ்விதமே ஆக்ஸிஜனும் ஹைட்ரோஜனுமே சேர்ந்து ஜலம் ஏற்படுமாயினும் இவைகளுக்கு இச்சேர்க்கையைத் துரிதப்படுத்த ப்ளாடினத்தின் உதவி தேவை. இவ்விதமே ஆஸவாரிஷ்டங்கள் — காடி பாலிலிருந்து தயிர் முதலியவைகள் தயாரிப்பிலும் ஸந்தானம் எளிதில் ஆக கிண்வம் முதலியவை மிகவும் உதவுகின்றன. இவ்விதம் ரஸாயன மாறுதலில் உதவுபவை கேடலிஸ்ட் எனப்படுகின்றன.

ஆஸவங்கள், தயிர், காடி முதலியவைகள் ஸந்தானம் ஆக உதவுபவை சில ஜீவாணுக்களாகும். ஜீவாணுக்கள் ரோகஜநகம் (Pathogenic) அரோகஜநகம் (nonpathogenic) என இருவகைப் படும். எல்லா ஜீவாணுக்களும் ரோகங்கள் உண்டாக்குபவையல்ல. உடலில் ஆரோக்கிய நிலையில் ஏற்படும் பல்வேறு பரிணாமங்களுக்கு இந்த ஜீவாணுக்களே காரணமாகின்றன.

ரஷ்ய விக்ஞானி மெச்னிகாஃப் என்பவர் குடலிலுள்ள ரோகஜநக ஜீவாணுக்களால் ஏற்படும் விஷப் பரவுதலை (autoinfection) தயிரிலுள்ள (Lactic Acid Bacteria) எனும் ஜீவாணுக்கள் விழுங்கி (phagocytosis) ஆயுளை நீடிக்கச் செய்கின்றனவென்றும், அதனால் தயிர் மோர் அதிகமாகச் சாப்பிடுபவர்கள் நீண்ட ஆயுளுடன் விளங்குகின்றார்கள் எனக் கண்டுபிடித்து நோபல் பரிசு பெற்றுள்ளார்.

ஆமாசயம் வாய் முதலிய இடங்களில் சுரக்கும் பாசகத் திரவங்களில் இவ்வகை கேடலிஸ்ட் சக்தி பெற்ற அம்சங்களும் சேர்ந்திருக்கின்றன. அதிக அளவில் ஆராய்ச்சி செய்ததின் பலனாக எங்கெங்கு தாதுவாகவோ மலமாகவோ மாற்றும் பாகம் நடைபெறுகிறதோ ஆங்காங்கு, அவ்வித பாகத்தின் காரணமாக கேடலிஸ்ட் பிரிவைச் சேர்ந்த என்ஸைம் எனும் பாசகப் பொருள் இருப்பதாக அறியப்பட்டது.

அவைகளுக்கு அந்த அந்த இடம் அல்லது பாகம் ஆகும் பொருளுக்கேற்ப ஏஸ் (Ase) என்ற விகுதியுடன் உள்ள பெயர் அமைக்கப்பட்டது. உதாரணமாக மாவு-சத்தான கார்போ

ஹைட்ரேட்டின் செயலான அமைலம் (Amylam) என்ற பெயருடன் ஏஸ் சேர்த்து (Amylase) என மாச்சத்தைப் பாகம் செய்ய உதவும் என்ஸைமிற்குப் பெயரிடப்பட்டது. என்ஸைம் என்றாலே (EN) உள்ளே (ZYME) மாறுதல் உண்டாக்கக் கூடியது எனப்பொருள்.

பித்தத்தினுள் அடங்கியிருந்து அக்னி உடலில் பாகத்தை நிறைவேற்றுகின்றதென்ற ஆயுர்வேதக் கொள்கைப்படி பாசக பித்தத்தின் உதவிபெற்ற சரீரத்தில் பாகம் - விபாஜனம் - சோதனம் என்ற அக்னிச் செயல்களைப் புரியும் பாசகப் பொருள்களில் என்ஸைம்களும் அடங்கலாம் எனக் கொள்வதில் யுக்திக்கு விரோதம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

தீபனம் பாசனம் என்ற உணவை ஜீர்ணிக்கச் செய்யும் பொருள்களில் இருவகை உண்டு. ஜடராக்னியின் சக்தியைத் தூண்டி வளர்த்து உணவை பாகம் செய்ய உதவுபவை தீபனம் எனப்படும். ஜடராக்னி சக்தியை நேரிடையாக வளர்க்காமலே, தன்னிடமுள்ள அக்னிசக்தி மிகுதி காரணமாக நேரிடையாகவே உணவை பாகம் செய்பவை பாசனமாகும். சிறுநாகப்பூ முதலியவை இவ்வகைப்படும். இவ்வகைப் பாசனப் பொருள்களில், என்ஸைம் உருவில் ஏதோ ஒரு விசேஷாம்சம் இருப்பதையும், அது குடலிலுள்ள என்ஸைம்கள் போல பாகமடையாத உணவைப் பக்குவப்படுத்துவதில் நேரிடையாக உதவுவதையும் ஊஹிக்க இடமுண்டு. பப்பாளியிலிருந்து எடுக்கப்படும் பாபைன் (Papain) இவ்விதம் பாசனமான என்ஸைம் எனக் கருதப்படுகின்றது. ஆமாசயத்திலுள்ள பாசகத் திரவத்திலுள்ள பெப்ஸின் (Pepsin) என்ற திரவத்தைப் போல புரதப் பொருளைப் பாகம் பண்ணக்கூடியதாகும். அவ்விதமே யவை முதலிய முளையுள்ள தான்யங்களை ஊறவைத்து முளைக்கட்டி எடுக்கப்படும் சத்தும் (மால்ட்) மாச்சத்தை ஜீர்ணக்கவல்லது. இதிலுள்ள என்ஸைம் டயாஸ்டேஸ் (Diastase) எனப்படுகின்றது. இந்த மால்ட் எக்ஸ்டிராக்ட் அக்னிமந்தம் அஜீர்ணம் இவைகளில் உபயோகப் படுகின்றது ஆயுர்வேதத்தின் பாசனத் திரவ்யங்களை இவ்வகையிலும் ஆராய்ந்து பார்க்கலாம்.

இந்த * என்ஸைம் பொருள்கள் சரீரத்தில் சரியாக இயங்காவிடில் வாழ்க்கையைக் கல்பனை செய்து கூட பார்க்க முடியா

---

* Indeed, it is very difficult to see how life could continue without them; —Hand-book of physiology by Mc. Dowell- (1948.)

தென்றும் [1] இவையின்றி சரீரத்தில் ஏற்படும் ரஸாயன மாறு தல்கள் பூர்ணமாகாது அல்லது நடைபெருது போகலாம் என்றும் [2] நவீன விக்ஞானிகள் அதிசயப்படுவதை சரகஸம்ஹிதையில் பித்தம் தான் உடலின் சுபாசுபங்களுக்கு முக்கிய காரணம் என்று கூறும் ஒரு தரப்பு வாதத்திற்கும் உள்ள ஒற்றுமையைக் கல்பனை செய்து பார்க்கலாம். எனினும் சரகரின் கருத்தான திரிதோஷங் களின் சமமான பெருமை மனதிற்கொள்ளத்தக்கது.

பாசக பித்தத்தில் என்ஸைம்களைப் போன்று, அமில வர்க் கத்தைச்சார்ந்த பாசகத்திரவங்களும் சில உள் சுரப்புகளும் அடங்கும். இவைகளைப்பற்றி நவீன வைத்ய விஞ்ஞானம் கூறு வதை அறிவது பாசக பித்தத்தின் தன்மையை விரிவுபடுத்த உதவும். (தொடரும்)

## புதிய இயக்குநர்

தமிழ்நாட்டரசின் நாட்டு வைத்திய இலாகா இயக்குனராகப் பதவியேற்றிருக்கும் டாக்டர், P. M. வேணுகோபால் H. P. I. M. அவர்களை உள்ளக் களிப்புடன் வரவேற்று வாழ்த்துவோமாக. பாளையங்கோட்டை நாட்டு வைத்திய முறைக் கல்லூரிப் பேராசிரியராகவும், பின் தலைவராகவும் இருந்து பல்லாண்டுகள் பல அரிய சேவைகளைப் புரிந்து வந்திருக்கும் திரு. வேணுகோபால் அவர்கள் தமிழ்நாட்டில் சென்ற 5, 6 ஆண்டுகளாக நாட்டு வைத்திய முறை அடைந்துள்ள வளர்ச்சிக்கு மேலும் ஊக்கம் அளித்து மருத்துவ சேவையில் அதற்குரிய மதிப்பை அடையச் செய்வதில் தளராது உழைப்பார் என்பதில் ஐயமிருப்பதற்கில்லை. இயக்குநருக்கு இன்றுள்ள பொறுப்பு மிகவும் சக்தி வாய்ந்தது. அதை திறம்பட செயலாற்றும் திறமை பெற்ற திரு. வேணு கோபால் அவர்கள் நாட்டு வைத்திய முறைகளை நல்ல அடிப்படை யில் வளர்ச்சி பெறச் செய்வார் என எதிர்பார்ப்போமாக.

---

1. Probably in the great majority of cases, the chemical reactions going on in our cells would be impractical and incomplete in the absence of catalysts. — Fundamentals of Physiology. by Tokay.

2. அக்நிரேவ சரீரே பித்தாந்தர்கத: குபிதாகுபித:
சுபாசுபாநி கரோதி.

# அட்ரினல் கிரந்தியும் ஸாதகபித்தமும்

விருக்கங்களுக்கு மேல் தொப்பி போன்று முந்திரிவிதை உருவில் இரு கிரந்திகள் உள்ளன. அவை அதிவிருக்கக் கிரந்திகள் Adrenal glands எனப்படும். ஒவ்வொரு கிரந்தியிலும் தனித் தனியாக இரு அறைகள் உள்ளன. கிரந்தியை குறுக்கே நறுக்கினல் இவ்விரு பகுதிகளும் புலப்படும். இதன் நடுப்பகுதியை அதிவிருக்க மத்யம் – Adrenal medulla அட்ரினல் மெடுலா என்பர். இந்த பாகத்தை நாற்புறமும் மூடியிருக்கும பட்டை போன்ற பாகம் அதிவிருக்கவல்கம் Adrenal cortex அட்ரினல் கார்டக்ஸ். இவ்விரு பகுதிகளிலிருந்து வரும் சுரப்பு திரவங்களுக்கும் அவைகளின் செயல்களும் மாறுபட்டதே. நவீன வைத்யமுறை நிபுணர்களின் ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அவைகளின் தன்மையைப் பற்றிய விவரம் பின்வருமாறு:—

சரீரத்தினுள் பல அந்தஸ் ஸ்ராவிகளான கிரந்திகள் உள்ளன. அவைகளின் அந்தஸ் ஸ்ராவம்-உள் சுரப்புத் திரவம்-சரீரத்தின் பரிணமத்தில் பெருத்த பணிபுரிகின்றன, இவைகளைப் பற்றிய அறிவைப் பெற அந்த கோளத்தை அகற்றி, அதனல் சரீரத்தில் ஏற்படும் மாறுதல்களைக் கண்டுபிடிப்பது, கிரந்திகளை நீக்கியவர்களுக்கும், கிரந்தியுள்ளவர்களுக்கும், அந்த கோளத்தின் சுரப்பைத் தனியே தயாரித்து உட்செலுத்துவது என்ற வகையில் ஹீந-ஸம-அதியோகங்களை சரீரத்தில் உண்டாக்கி, அதனல் ஏற்படும் க்ஷய விருத்தி லக்ஷணங்களைக் கண்டுபிடித்தன் மூலம் அதன் ஸமநிலையையும், அப்போது அது தேகத்தில் புரியும் செயல்களையும் ஊஹித்தறிந்துள்ளனர். அவ்விதம் ஆராய்ச்சி செய்ததில் இக்கிரந்தியின் நடுப்புறத்தின் செயல்தன்மைகள் அறியப்பட்டுள்ள விதம் பின் வருமாறு:

மத்யப்பகுதி: இதன் அந்தஸ் ஸ்ராவம்–உட்சுரப்புத் திரவம் அட்ரினலின் ஆகும். இந்த அட்ரினலின் மத்யப் பகுதியிலிருந்து ஸத்வபாதனமாகவும் செயற்கை முறையாகவும் தயாரிக்கப்

படுகின்றது. மருந்தாக இது அதிகம் உபயோகப்படுகின்றது. இதன் முக்கியப்பணி, உடலில் திடீரென ஏற்படும் சரீர சேஷ்டை களுக்கு உடலைத் தயாராக்குவதே. மத்ய ஸ்வதந்திர நாடீ தந்திரத்தின் தூண்டப்பட்ட நிலையின் செயலே இதன் செயலாகும். சூரத்தன்மை, பயம், ஓடவேண்டிய நிர்பந்தம் முதலிய எதிர்பாராத சூழ்நிலை ஏற்படும்போது இந்த கிரந்தியின் ஸ்ராவம் மத்ய ஸ்வதந்திர நாடீ கேந்திரத்திற்கு உதவியாக நின்று செயற்பட்டு மனிதனின் ஆபத்தைத் தவிர்க்க வழி செய்கின்றது. ஆனால் இந்த கிரந்தி இந்த மாதிரியான ஆபத்து நிலைகளில் தான் சுரக்கிறதா? அல்லது தினசரி வாழ்க்கையில் இதற்கேதாவது உபயோகமுண்டா என்பது—இன்னமும் முடிவாக அறியப்படவில்லை.

பயம்—ஆத்திரம் முதலிய சூழ்நிலைகளில் ஹிருதயத்துடிப்பு அதிகமாகி, ஹிருதயத்திலிருந்து ரஸரக்தங்கள் வெளிப்படுவது அளவுக்கு மிஞ்சுகிறது ஹிருதயத்திற்குப் புஷ்டியளிக்கும் ரக்தக்குழாய்கள் விரிந்து நிறைந்த அளவில் ஹிருதயத்திற்குப் பலமளிப்பதால் இந்த அவஸர வேலைக்கு ஹிருதயம் தயாராக முடிகின்றது. வயிற்றிலுள்ள ரக்தக்குழாய்கள் சுருங்கி எலும்பு களுடன் ஒட்டியுள்ள பேசிகளில் அதிகமாக ரக்தம் சேர்கின்றது. இதனால் சுற்றுப்புற அழுத்தம் மிகுவதால், ரக்த அழுத்தம் மிகுந்து ரக்தம் வேகமாகச் சுற்றிவருதால், சரீர சேஷ்டைகளைத் தீவிர கதியில் செய்யமுடிகிறது. ரக்தத்தைத் தாங்கும் ப்லீஹாவிலிருந்து பிராணவாயுவைத் தாங்கக்கூடிய ரக்த கணங்கள் அதிகம் வெளியாவதால் இந்த திடீர் முயற்சிக்குத் தேவையான பிராணவாயும் அதிக அளவில் தேவைப்பட்ட இடத்திற்குச் செல்கின்றது. இதற்கேற்ப சுவாஸவேகமும் அதிகமாகி சுவாஸாசயம் விரிந்து அதிக அளவில் கரியமலவாயு வெளியேற்றப்பட்டு பிராணவாயு உட்செலுத்தப்படுகின்றது. யகிருத்தும் தூண்டப்பட்டு அதிக அளவில் திராக்ஷா சர்க்கரையை ரத்தத்துடன் கலந்துவிடுன்றது. அதனால் அவசரத் தேவைக்கு தசைகளுக்கு வேண்டிய உணவு பூர்த்தியாக கிடைக்கின்றது. அதனால் தசைகள் தளர்ச்சியடையாமல் வேலைசெய்யமுடிகின்றது. ரக்தத்தில் உரையும் தன்மை அதிகமாகிறது. அதனால் எதிர் பாராத தாக்குதலால் ரத்தக் கசிவு ஏற்படினும், அதிக அளவில் ரத்தம் வெளியாகாமல் கசிவு உரைந்து தடைபடுகின்றது. குடலின் பல்வேறு சேஷ்டைகள் ஸ்தம்பித்துவிடுகின்றன. மற்றுமுள்ள நடு துவாரமுள்ள தசைகள் வேலை நிறுத்தம் செய்வதால் உணவு பாகம் தடைபடுகின்றது. இவையனைத்தும் ஒரு விசேஷித்த திடீரென ஏற்பட்ட சூழ்நிலையில் அபாயத்தைத்

தவிர்க்க உடல் ஏற்றுக்கொள்ளும் பிரதிக்ரியை. ஆக இத்தகைய இதன் குணங்களை ஆராய்ச்சி செய்ததன் பயனாக ச்வாஸாசய விரிவோ, ஹிருதயத்திற்குப் பலமோ தேவைப்படும்போது இதை இஞ்செக்ஷன் மூலம் உட்செலுத்தி வருகிறார்கள். மற்றும் மூக்கு முதலிய இடங்களிலிருந்து ரத்தக் கசிவு மிகுந்து காணும் நிலையில் இதை பஞ்சில் நனைத்துப் பிசுவாக விரணங்கள்மேல் போடப் படுகிறது, சுவாஸாசய விரிவு தேவைப்படும் தமக சுவாஸத்திலும் (Spasmodic Asthma) அதிர்ச்சி முதலியவைகளிலும் இதன் உபயோகம் மிகுந்து காண்கிறது.

ஐந்து வகை பித்தங்களில் ஒன்றான ஸாதகபித்தம் ஹிருதயத்திலிருந்துகொண்டு பயம் சூரத்தன்மை, கோபம் உற்சாகம் முதலிய துவந்துவங்களை தனது விகிருதி—பிரகிருதி நிலைகளில் செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. அட்ரினலின் செய்கைக்கும் இந்த பித்தத்திற்கும் ஒருவாறு ஒற்றுமை காணமுடியும் அட்ரினலினின் உற்பத்தியிடம் விருக்கமானாலும் அது செயல் புரியும் முக்ய ஸ்தானம் ஹிருதயமாகும். ஸ்தானம் என்பது முக்கியப் பணிபுரியுமிடம் என்று கொள்வதே நியாயம். உடல் முழுவதும் சுற்றிவரும் பித்தத்தின் முக்கியத் தோற்றமளிக்கும் அல்லது முக்கியச் செயலாற்றுமிடமே ஸ்தானமாகும். ஸாதக பித்தம் ஹிருதயத்தை ஆவரணம் செய்யும் கபத்தையும் தமோ தோஷத்தையும் நீக்கி ஹிருதயத்தின் அயர்வைப் போக்கிப் பலமளிக்கும் குணமுண்டு இந்த கபத்திற்கும் தமஸிற்கும் நவீன விஞ்ஞானத்தின் அஸிடில்கொலின் (Acetyl choline) பொருளுக்கும் செயலாற்றலில் ஒற்றுமை உண்டு இது ஹிருதயத்திற்கு தளர்ச்சியையும் ஓய்வையுமளிப்பது, இதைப் பற்றி பிறகு விவரிப்போம். அட்ரிலினலினுக்கு எதிர்ப் பொருள் அஸிடில்கொலின் ஆகும். பித்த வர்கத்தைச் சேர்ந்த அட்ரினலினுக்கு கபவர்கத்தைச் சேர்ந்த அஸிடில்கொலின் எதிர்ப்பொருள் என்றே ஊஹிக்க முடிகிறது. அட்ரினலின் தான் ஸாதகபித்தமென்றோ, ஸாதக பித்தம் அட்ரினலினைத் தவிர வேறு இல்லை என்றோ கொள்வது சரியல்ல. ஆனால் ஸாதக பித்தத்தின் எல்லைக்குட்பட்டது இந்த அட்ரினலின் என்று மாத்திரம் கொள்ளத்தகும். சரீரத்தில் கப பித்த வாயுக்கள் ஸம நிலையில் ஒன்றையொன்று தன் நிலை மீறாது பாதுகாப்பதே ஆரோக்கியத்திற்குப் பாதுகாப்பாக அமைகிறது. இவைகளில் ஒன்றின் சக்தி குன்றுவதால் மற்றொன்று அளவு மீறுகிறது அதை ரோக நிலை என்கிறோம். இக்கண்கொண்டு அட்ரினலின் — அஸிடில்கொலின் முதலியவைகளை அறியமுற்படுவது நல்லதென்பதே இக்கட்டுரையின் நோக்கம்,

———

# புற்று நோய்

வைத்ய V. S. பஞ்சநத சர்மா

(வைத்ய விசாரதா ஆயுர்வேத சிரோமணி)

இக்காலத்தில் நாகரீக மோஹத்தில் முழுகி முறைதவறி கூடாததான ஆகாரங்கள் – நடை உடை பாவனைகளால், இயற்கையும் கெட்டு, பருவங்களும் நேர்மாருக – மாறுதல் அடைந்து, உலகத்தில் – சகல ஜீவராசிகளுக்கும் உண்டாகும் வியாதிகளின் தொந்தரவுகளையும் அதன் காரணமாக அல்லல்பட்டு தினமும் மரிப்பதையும் கண்கூடாகக் காண்கிருேம். பல அறிஞர்களின் ஆராய்ச்சிகளுக்கும் கட்டுப்படாமல் – பரவிவரும் வியாதிகளில் மிக பயங்கரமான வியாதி கான்ஸர் என்ற புற்றுநோய்.

நவீன வைத்ய முறையில் கான்ஸர் என்று குறிப்பிடும் இவ் வியாதியைப்பற்றி ஆதிகால வைத்ய நூல்களான ஆயுர்வேத நூல்களில் காணக் கிடைக்கவில்லை என சிலரின் வாதம். ''நஹி ஸர்வ விகாராணும் நாமதோ அஸ்த்தி த்ருவாஸ்திதி:'' என்றபடி எல்லா நோய்களுக்கும்-பெயர் இருக்கவேண்டிய அவச்யம் இல்லை. அவைகளின் லக்ஷணங்கள் இருந்தால் போதுமானது. அதன் மூலம் சிகித்சை செய்தால் நிச்சயம் பலன் கிடைக்கும் என்பது சில பெரியோர்களின் அனுபவவாக்கு.

முதலில் நவீன வைத்ய நூல்களில் - பல பெரிய மேதாவிகளின் ஆராய்ச்சிகளால் இந்த கான்ஸர் – நோயின் – குணங்களையும் வரும் விதங்களையும் - தெரிந்துகொள்ளும் விதங்களையும் குறிப்பிட்டிருப்பதை ஓரளவு தெரிந்துகொள்ளவேண்டும். பிறகு ஆயுர்வேத நூல்களில் குறிப்பிட்டுள்ள லக்ஷணங்களை வைத்துக்கொண்டு புரிந்துகொண்டு சிகித்சை செய்ய உதவியாக இருக்கும். ஆதலால் நவீன வைத்ய முறைப்படி கான்ஸர் - எனும் நோயின் – நிதானம், ரூபம் – சம்ப்ராப்தி சிகித்சை இவைகளை முதலில் விளக்கி பின் ஆயுர்வேத முறைப்படி நிதானுதிகளை விளக்குவோம்.

கான்ஸர் என்று பெயர் வந்த விவரம் :

முதலில் நோயின் உருவம் நன்கு தெரியாமல் இருந்த பொழுது இதை ஒரு சாதாரண வீக்கம் என்றும், சாதாரண வீக்கத்தைப்போல் இல்லாமல்; சிவந்த நிறமும் – குத்துவலி

யுடனும் ஏதோ ஒன்று வெளிவருவதுபோல் தோன்றுவதால் வளர்ச்சி என்றும், நாளடைவில் ஆராய்ச்சி செய்து இது ஏதோ ஒரு க்ரந்தி விசேஷமான வியாதி (Sarcoma) என்றும் சொன்ஞர்கள். (Sarcose) என்ருல் தசை. பின் இது மாம்ஸ ப்ரதான காரணமான நோயல்ல; மாம்ஸங்களின் ஸம்யோஜக தந்துக்களில் உள்ள கோசங்கள் ப்ரதான காரணங்கள் என்பதால் Tumour என்று மாற்றினுர்கள். பின்பு வந்த ஆராய்ச்சி நிபுணர்கள் எவ்வித நேரிடையான காரணங்களும் இல்லாமல் - அவச்யமில்லாமலும் ஏதோ ஒரு அவயவத்தில் அனுயாசமாகவும் - தடுக்க முடியாமலும் - உண்டாகும் கட்டிகளுக்கு Tumour என்றும் இவ்வியாதியில் - சரீரத்தில் ஏதோ ஒரு பாகத்தில் அவச்யமில்லாமல் கட்டி உண்டாகி இதன் காரணமாக உடலில் உள்ள தாதுக்கள் உப தாதுக்களின்போஷகாம்சங்களை குறைத்து கடைசியில் உயிருக்கே ஆபத்து வருவதால் Cancer அல்லது Carcinoma என்று மாற்றினுர்கள். Cancer என்னும் சொல் க்ரேக்க மொழியில் கர்க்கட ராசியை குறிப்பது. கர்க்கட என்ருல் நண்டுக்குப்பெயர். நண்டு எவ்விதம் தண்ணீருக்குள்ளே இருந்து கொண்டு சிறிய ஜீவராசிகளை பிடித்து தன் பிடியை விடாமல் சிறுகச் சிறுக உட்கொள்ளுகிறதோ அதுபோல் இவ்வியாதியும் ஏதோ ஓரிடத்தில் இருந்துகொண்டு உடலிலுள்ள தாதுக்கள் உபதாதுக்களின் போஷகாம்சங்களை உட்கொண்டு உயிருக்கே உலைவைப்பதால் இப்பெயர் வந்ததாகவும் ஊகிக்கலாம்.

**கான்ஸர் உண்டாகும் விதம் :**

சாரீர சாஸ்த்திரப்படி (Anatomy) நம் உடலில் உள்ள ரத்தம், மாம்ஸம்; தோல் - நரம்பு போன்ற ஒவ்வொரு உறுப்புகளும் - பல சிறிய, பெரிய பல உருவங்களை உடைய கோசங்களின் (Cells) தொகுப்புக்களால் ஆனது என்பது அறிந்த ஒன்றே மேற்படி கோசங்களில் Chromosome என்ற பொருளுடன் Geens என்பதும் இருக்கின்றன. இந்த Geens குறைந்தாலோ அல்லது அறவே அற்றுபோய் விட்டாலோ கான்ஸர் நோய்க்கு மூலகாரணமான Disaxiribo - Nuclic - Acid என்ற விஷப்பொருள் அதிகரித்து விடுகின்றன. இவ்விதம் அதிகரித்த டைஸாக்ஸிரிபோ - ந்யூக்ளிக் ஆஸிட்டால் - கோசங்கள் கெட்டு - உருவத்திலும், அளவிலும் பெருத்து, பக்கத்தில் உள்ள ஆரோக்யமான கோசங்களுக்குள்ள - போஷகாம்சங்களை க்ரகித்துக்கொண்டு - கெடுத்து இந்நோய் தோன்றுகிறது. கோசங்கள் அமைந்தவிதம் - அவைகளின் உள்ளே உள்ள இயக்கங்களைப்பற்றி - ஆயுர்வேத சித்தாந்தப்படி நம் அபிப்ராயங்களை பின்பு விளக்குவோம்.

"Virus" என்ற ஜீவாணு இந்நோய்க்கு மூலகாரணம் என மற்றொரு சாரார் கூறுகின்றனர். முன் சொன்ன Nucli - Acid இந்த ஜீவாணுவுக்குள் அதிகம் காணக்கிடைக்கின்றன. இந்த ஜீவாணுக்கள், மலேரியா – யானைக்கால் வியாதி, க்ஷயம் - காலரா போன்ற நோய்களில் உள்ளதைப்போல் - சூக்ஷ்மதர்சன யந்திரத்தில் பார்கக முடியாதவைகள் எனக் கருதுகிறார்கள். புலப்படாத ஒன்று எவ்விதம் காரணமாகக் கூடும். காரணம் விஞு-கார்யஸ்ய-நோத்பத்தி : என்ற நியதிப்படி அவசியம் காரணம் இருந்துதான் ஆக வேண்டுமென முடிவாகிறது. ப்ரத்யக்ஷ காரணத்துக்கு அடுத்தபடியான அனுமானப்ரமாணத்தைக் கடைப்பிடித்து-இந்நோய்க்கு VIRUS என்ற இந்த ஜீவாணுக்கள் காரணமென ஊஹித்தார்கள்.

**VIRUS ஜீவாணுவை அணுமானித்த வீதம்:—**

ஒரு கான்ஸர் நோயாளியின் லசீகாவை (Serum) ஒரு பில்டர் பேப்பரில் வடிகட்டி வைத்து அதில் மேல் தெளிவாக உள்ளதில் சிறிது எடுத்து ஒரு நல்ல ஆரோக்கியமுள்ள மனிதனுடைய உடம்பிலும் அடியில் உள்ளதில் மற்றொரு ஆரோக்கியமான மனிதனின் உடம்பிலும் செலுத்தி பரிசோதித்துப் பார்த்ததில் முதல்வனுக்கு எவ்வித கோளாறும் இல்லாமல், இரண்டாமவனுக்கு மட்டும் அதே நோய் வரக் கண்டார்கள். அடியில் உள்ள லசீகாவை Microscope ல் பார்த்தும் ஒன்றும் புலப்படவில்லை. பின்பு அதில் ஏதோ ஒன்று இருக்கத்தான் வேண்டும் என நிச்சயமாக ஊஹித்து, அதற்கு Virus என பெயரும் வைத்தார்கள்.

**கான்ஸர் வருவதற்கான காரணங்கள்:—**

முன் காலத்தில் இவ்வித வியாதிகள் அதிகம் காணக் கிடைக்காமல், இப்பொழுது மட்டும் எங்கும் தோன்றக் காரணமென்ன என்று சற்று சிந்தித்தால் உண்மை புலப்படும். இக் காலத்தில் முறையான ஆகாரங்களோ, ஆசாரங்களோ சிறிதும் இல்லை. எங்குநோக்கினும் சாப்பாட்டுக் கடை, வெற்றிலை பாக்கு-புகையிலை சிகரெட் கடை; கார் போன்ற துரித வண்டிகளினுல் கிளப்பும் புழுதிப் படலம், இதைத் தவிர ஜன நெருக்கம் ஆகியன.

முதலில் சாப்பாட்டுக் கடையை எடுத்துக் கொள்வோம். சாப்பாட்டுக்கடையில் போடும் ஒரு பொருளாவது சுத்தமாகவோ கலப்படமில்லாமலோ இல்லை. எது எடுத்தாலும் வனஸ்பதி அல்லது பன் முறை பல பலகாரங்களை வறுத்து எடுத்த எண்ணை; துத்தநாக டின்னில் அடைத்து வந்த தயிர், காபி முதலியவைகள்.

காலையில் எழுந்தவுடன் பல் துலக்கியோ துலக்காமலோ கொதிக்கக் கொதிக்க காபி; சிறிது நேரம் கழித்து கலப்படமான

டிபன் மேல் கொதிக்க கொதிக்க காபி. இவ்வளவு சூடும் போதாமல் வெற்றிலை பாக்கு புகையிலை அதற்கு மேல் பீடி அல்லது சிகரெட். இதுபோல் தினம் பல வேளை உபயோகித்தால்-இந்த உடல் எவ்வளவுதான் இவைகளுக்கு ஈடு கொடுக்கும்! ஆண்டவனும் பொறுத்திருப்பார்! இவ்வுடலை ஆண்டவன் குடி கொண்டிருக்கும் கோயில் என்றே—அதைச் சுத்தமாகவும், நல்ல முறையிலும் வைத்திருக்க வேண்டும் என்ற கொள்கையும் சிறிதளவேனும் இல்லையே. இதுவும் கலி காலத்தின் கொடுமைதான் என நினைக்க வேண்டியிருக்கிறது.

(தொடரும்)

## தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலம்

மதுரை கிளை

மதுரைக் கிளை அங்கத்தினர்கள் மாதக் கூட்டம் 25-2-73 ஞாயிறன்று மாலை வைத்தியர் திரு. S. வேலாயுதம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வைத்தியர்கள் திரு. V. ஸோமசேகரன், திரு S. ஸ்ரீனிவாஸய்யர், திரு. V. K. கேசவராமய்யர், திரு. G. ரவீந்திரன் இவர்கள் காஸச்வாஸ நோயில் பல நிலைகளைப் பற்றிப் பேசினர்கள். காரியதர்சி வந்தனம் கூற கூட்டம் இனிது நிறைவெய்தியது.


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்

N. வைத்யநாதன், R. M. P.

# ஸ்வர்ண வங்கம்

சுத்தி செய்யப்பட்ட ஈயம், ரஸம், கந்தகம் இவை வகைக்கு 4 தோலா, நவச்சாரம் 4 தோலா, வெடியுப்பு ஒருதோலா, முதலில் ஈயத்தை இருப்புச்சட்டியில் உருக்கி கல்வத்திலிட்டு உடன் அதில் ரஸத்தைச் சேர்த்து இடிக்கவும். அது பிசைந்த மாவுபோலாகும். இந்த பிஷ்டியை உப்பு கரைத்த ஜலத்தில் இரண்டு நாள் அரைத்து 7, 8 தடவை சுத்த ஜலத்தால் அலம்பவும். அதிலுள்ள க்ஷார அம்சம் அகலும்வரை, அதாவது ஜலம் கறுத்துப்போவது நின்று சுத்தமாக ஆகும்வரை அலம்பவும். பிறகு வெயிலிலிட்டுக் காய வைத்து கந்தகம் சேர்த்துக் கஜ்ஜலி செய்து கொள்ளவும். பிறகு நவச்சாரத்தையும் வெடியுப்பையும் சேர்த்து அரைத்துக் குப்பியிலிட்டு மணல் நிறைந்த பானை (வாலுகாயந்திரம்) யிலிட்டு 24 மணிநேரம் நடுத்தரமான கிரமாக்னியில் எரித்து வரவும். எரியும்போது தவச்சாரம் மேல்கிளம்பி குப்பியின் வாயை அடைத்துக் கொள்ளுமாதலால் அதை பழுக்கக் காய்ச்சிய இருப்புக் குச்சியால் கிளறிவிடவும். 8 அல்லது 10 மணி நேரத்திற்குள் கந்தகம் ஜாரணமாகி விடும். பிறகு குப்பிக்கு மூடியிட்டு சீலை மண் செய்து 15-16 மணிநேரம் எரிக்கவும். தானாக ஆறியவுடன் குப்பியின் அடியில் தங்க நிறத்துடன் உள்ள ஸ்வர்ண வங்கத்தை எடுத்துக்கொள்ளவும். இது கினியா தங்கம் போன்று சிவந்த மஞ்சள் நிறத்தில் இருக்கும். அசல் தங்கநிறம் ஏற்பட வேண்டுமாகில், ஸ்வர்ண வங்கத்தை துணியில் சுத்தி வென்னீரில் நனைத்து உடன் காயவைக்கவேண்டும்.

அளவும் அனுபானமும்: 2-4 யவங்கள். தேன் வெண்ணெய், புஷ்டிகரமான மூத்திர சுக்ர சோதனமான லேகியம் முதலியவை.

குணமும் உபயோகமும்: ஸ்வர்ணவங்கம் சீதவீர்யம், சீதம், ரூக்ஷம், ஸரம், கசப்பு, உப்பு, புளிப்பு சுவையுள்ளது. எல்ல அங்கங்களுக்கும் பலமளிக்கும் ரஸாயனம். சுக்ராசயத்தையும் மூத்ராசயத்தையும் சுத்திசெய்து அவைகளில் ஏற்படும் விரணத்தையும் சீழ் பிடித்தலையும் நிவர்த்திக்கும். சுக்ர விருத்தி, பல விருத்தி, இந்திரியங்களுக்கு பலம், சுக்ர விருத்தி – ஸம்ரக்ஷணங்களால் புத்திசக்தி விருத்தி அளிக்கவல்லது. நல்லபசி, சரீர காந்தி யளிக்கும். கழுத்துக்கு பேற்பட்ட அங்கங்ளிலும் சுவாஸ

சயத்திலும் ஏற்படும் கபநோய்களிலும், ஆண் பெண் பிரஜனன உறுப்பு நோய்களிலும் மேதஸ் அதிகமாவதால் வரும் நோய் களிலும் நல்ல குணமளிக்க வல்லது.

பிரமேகம், நபும்ஸகத்தனம், சீக்ரமாக சுக்ரம் நழுவுதல், மூத்திரத்துடன் சுக்ரம் விழுதல், வெட்டை, நாட்பட்ட வெள்ளை நோய்களில் இது ரஸாயனமாகும் வியாதி நிவிருத்தி செய்யும் விசேஷ ஔஷதமுமாகின்றது.

இதை இடைவிடாமல் ஸேவிப்பவருக்கு சுக்ரபலம் அதிகமாகி காமஇச்சை வளருகின்றது. நாட்பட்ட காசம், சுவாஸம் ரத்தக் குறைவால் ஏற்படும் சோஷம், கர்ப்பாசயம் நழுவுதல், ராஜ யக்ஷ்ம வியாதியில் ஏற்படும் இரவில் அதிக வியர்வை, இவைகளைப் போக்கவல்லது.

சுக்ரத்தின் அளவு போதாமையாலோ, அல்லது கெடுதி அடைந்தமையாலோ, மக்கட்பேறு ஏற்படாமலிருந்தால் ஸ்வர்ண வங்கமும் ரஸஸிந்தூரமும் சேர்ந்து சாப்பிட குணம் தரும்.

அக்னி மந்தம் ஏற்பட்டு வயிற்றிலும் ரத்தத்திலும் மலமும் மூத்திரமுமாக மலாம்சம் வெளிப்படாமல் தங்கி அவ்வாசயங் களுக்குப் பலக்குறைவு ஏற்பட்டும், பிரமேகம், பஹுமூத்ரம், பசி, யின்மை போன்ற நோய்கள் ஏற்படுங்கால் இதன் உபயோகம் மிகவும் நல்ல பலனளிக்கின்றது. மலாம்சம் வெளிப்படாததால் சரீரத்தில் பரவிநிற்கும் விஷசக்தியைப் போக்கி நல்லபசி ஜீர்ண சக்தி, விருக்கத்திற்கு மூத்ரவிஸர்ஜன சக்தி அளித்துப் பல மூட்டுகின்றது.

நாட்பட்ட வெட்டை (கனேரியா) நோயில் மூத்ரநாளத் தினுள் ஏற்படும் எரிச்சல் வீக்கம், சீழ்விழுதல் இவைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்திக் குணம்தருகின்றது. ஆரம்பதசை யிலேயே இவ்வியாதியில் இதை உபயோகிக்க நல்ல குணமளிக் கின்றது. வெட்டை அதிக நாட்பட்டிருந்தால், ஸ்வர்ணவங்கம் 2 யவம், பவழபஸ்மம் (சந்திரபுடீ) 1 யவம், கோமூத்ர சிலாஜது 1 யவம், சீந்திற்சர்க்கரை 2 யவம் சேர்த்து மாத்திரையாக்கி அதை உபயோகித்துவர நல்ல குணமளிக்கும். சீழ்விழுதல் நின்றுவிட்ட

பிறகு ஸ்வர்ணவங்கம் 2 யவம் குடுசீஸத்வம் (சீந்திற்சர்க்கரை) 4 யவம், ஏலத்தூள் 8 யவம் வெண்ணெய் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட நல்ல சரீரபலம் ஏற்படும். இந்திரிய சக்தி அதிகமாகும்.

வெட்டையினுல் ஏற்படும் வாதநோய்களில் (முக்கியமாக ஸந்தி வாதத்தில்) இதன் சக்தி நன்கு தெரிகின்றது. ரஸம், ரக்தம் முதலிய தாதுக்களின் க்ஷீணத்தில் இது குணமளிக்கின்றது. இது ஒரு நல்ல ஜீவநீயமும் ரஸாயனமுமாகின்றது.

---


## FORM IV

(*See* Rule 8)

1. Place of publication ... TIRUCHIRAPALLI
2. Periodicity of its publication ... MONTHLY
3; Printer's Name ... V. S. MANI
   Whether citizen of India ? ... YES.
   If foreigner, state the country of origin ... —
   Address ... GITHA PRESS, East Bouleward Road, Tiruchirapalli-2
4. Publisher's Name ... T. S. ISWARAN
   Whether citizen of India? ... YES.
   If foreigner, state the country of origin ... —
   Address ... Chinnakadai Street, TIRUCHIRAPALLI-2
5. Editor's Name ... T S. ISWARAN
   Whether citizen of India ? ... YES
   If foreigner, state the country of oiigin ... —
   Address ... 27, Chinnakadai Street, TIRUCHIRAPALLI-2
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. ... TAMILNAD AYURVEDA MAHAMANDALAM, 18, Chinnakadai Street, Tiruchirapalll-2

I, T. S. ISWARAN, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) T. S. ISWARAN.
*Signature of Publisher*

5—3—1973.

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,


MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

# இம்ப்காப்ஸ்

## புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாக்கிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைகள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காப்ஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

Impcops

**உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்**

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

**இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**

அடையார், சென்னை 20.

**விற்பனை நிலையங்கள்:** 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, ஸொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/961/M TAM

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர் (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2
Printed at Githa Press, Tiruchirapalli-2.